**நிர்மாணவேலை கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை - 2024**

---

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

நிர்மாணவேலை கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் (“அதிகார சபை”) 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயலாற்றுகைக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, அதிகாரசபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால்

அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் அதிகாரசபை தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபையிற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். அத்துடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியளவினதாக காணப்படாவிடின் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்
### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

| | உரிய நியமங்களுடன் தொடர்பு மற்றும் இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் (SLPSAS) இலக்கம் 01 இன் பந்தி இலக்கம் 55 இன் பிரகாரம் மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் தேறிய நிதி வருமானத்தின் கீழ் மீண்டும் வகைப்படுத்தப்பட்டு (Reclassified) 2023 ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் செயற்பாட்டு வருமாமனம் என குறிப்பிடப்பட்டிருந்த ரூபா 37.94 மில்லியனுக்கான வட்டி வருமானம் தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் எதுவித வெளிப்படுத்தலும் மேற்கொண்டிருக்கவில்லை. | 2025 நிதிக்கூற்றுக்கள் முறையான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாமல் இருப்பதற்கு பொறுப்பாக இருக்கப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க மீண்டும் வகைப்படுத்தப்பட்ட நிதிக்கூற்று விடயங்கள் தொடர்பாக வெளிப்படுத்த வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் பிரகாரம் ஒரு வருடத்திற்கு மிகையான காலம் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ள உருவச் சொத்துக்கள் நிலையான சொத்துக்கள் என கணிக்கப்பட வேண்டிய போதிலும் அதிகார சபையின் இயக்குனர் பயிற்சிக் கல்லூரியின் உள்ளக மின் கம்பிகள் மறுசீரமைப்பதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 2.95 மில்லியன் தொகையில் ரூபா 1.84 மில்லியன் தொகை மாத்திரம் மூலதனப்படுத்தப்பட்டிருந்தது. அதன் படி நிதிக் கூற்றுக்களில் நிலையான சொத்துக்கள் ரூபா 1.11 மில்லியன் தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. இந்த மூலதனப்படுத்தாத பெறுமதியில் ரூபா 1.03 மில்லியன் தொகை மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் கட்டிடத் திருத்தங்கள் மற்றும் பராமரிப்பு என கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் செலவுகள் அந்த எண்ணிக்கையினால் மிகைக் கணிப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | இந்தத் தொகையினை மூலதனப்படுத்தி நிலையான சொத்துக்கள் என கணக்கீடு செய்வதற்கு தேவையான சரிசெய்தல்கள் 2025 நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க நிலையான சொத்துக்களை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமையால் அடுத்த ஆண்டில் நிதிக்கூற்றுக்களில் தேவையான சரி செய்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 11 இன் பின்னிணைப்பின் பிரகாரம் திறைசேரியினால் 2017 ஆண்டின் போது | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 11 இன் பிரகாரம் திரண்ட இலாபத்தின் கீழ் மூலதன | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க அடுத்த ஆண்டு |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கியிருந்த ரூபா 45.05 மில்லியனிற்கான மூலதன மானியம் (மோட்டார் வாகனம்) உரிமைகள் மாற்றங்கள் கூற்றில் திரண்ட மிகையின் கீழ் மூலதன மானியம் என காட்டப்பட வேண்டியிருந்த போதிலும் அந்த மானியம் திரண்ட மிகையுடன் கூட்டப்படாமல் மோட்டார் வாகன மானியம் என வேறாகக் காட்டப்பட்டிருந்தது. | மானியம் என 2025 நிதிக் கூற்றுக்களில் இதனை சரி செய்து காட்டப்படும். | நிதிக்கூற்றுக்களில் தேவையான சரி செய்தல்கள் மேற்கொள்ள வேண்டும். |
| (ஈ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 12 இன் 12 ஆவது பந்திக்கு முரணாக டவர்ஹோல் அரங்க மண்டப மன்றத்திலிருந்து 30 வருட செயற்பாட்டு குத்தகை உடன்படிக்கையின் கீழ் 2016 ஆண்டின் போது ரூபா 6 மில்லியனுக்காக பெற்றுக் கொண்டிருந்த காணி நிதி நிலைமைக் கூற்றில் ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் காட்டப்பட்டிருந்தமையால் ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 4.27 மில்லியனினால் மிகைக் கணிப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | டவர் மண்டப குத்தகை உடன்படிக்கை தொடர்பான "Right of Use Assset" என அறிக்கையிடப்படாமல் காணப்படல் அதிகார சபையில் காணப்படுகின்ற உரிமைத்துவ சிக்கலொன்றின் மீதான இடைக்கால செயற்பாடொன்றாகும். அந்த சிக்கலை தீர்த்த பின்னர் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 12 இன் பிரகாரம் சரியான வகைப்படுத்தல் மேற்கொள்ளப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க இந்த காணி பயன்படுத்தும் உரிமை காணப்படும் சொத்தொன்றென அடுத்த ஆண்டில் கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆண்டின் போது ரூபா 1.21 மில்லியன் தொகை செலவிடப்பட்டு நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த "கிணற்றுநீர் மூலதன செயற்திட்டம்" (Well Water Plant) 2023 ஆண்டு முதல் செயற்பாட்டு அலுவல்களுக்காக பயன்படுத்தப்பட்ட போதிலும் அதன் கிரயம் மூலதனப்படுத்தாமல் நடைமுறை வேலையின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2020 ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த ரூபா 1.21 மில்லியன் செலவிடப்பட்டிருந்த இந்த செயற்திட்டம் 2023 ஆண்டு முதல் செயற்பாட்டு விடயங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தமையால், அதன்படி அதனை மூலதனப்படுத்தி பெறுமானத்தேய்வு கழிப்பதற்கு தேவையான சீராக்கல்கள் 2025 நிதியாண்டில் அதற்குரிய தகவல்கள் அடங்கிய ஆவணங்கள் முறையான பரிசோதனையின் பின்னர் மேற்கொள்ளப்படும். | தற்போது செயற்பாட்டு அலுவல்களுக்காக பயன்படுத்தப்படுவதனால் அடுத்த ஆண்டு நிதிக்கூற்றுக்களில் உரிய சரி செய்தல்கள் மேற்கொண்டு கிரயத்தினை மூலதனப்படுத்த வேண்டும். |
| (ஆ) | இருப்புக்கள் பெறல் மற்றும் வழங்குதல் முகாமைத்துவத்திற்காக முறையான | எரிபொருள்கள் மற்றும் சீருடை இருப்பு மீதிகளில் | இருப்பு மீதிகளில் காணப்படுகின்ற |

| | | |
|---|---|---|
| இருப்பு முகாமைத்துவ முறைமை ஒன்று நிறுவியிருக்காமையால் வழக்கிழந்துள்ள மெதுவாக அசையக்கூடிய மற்றும் அசையாத இருப்புக்களை இணங்காத முடியாததுடன் பௌதீக ரீதியாக காணப்படாத பெறுமதி ரூபா 7.53 மில்லியனுக்கான எரிபொருள் மற்றும் சீருடை இருப்பொன்று இருப்புப் பதிவேட்டில் காட்டப்பட்டிருத்தல் மற்றும் சில இருப்பு விடயங்கள் இருப்புப் பதிவேட்டில் உட்படுத்தப்படுத்தி இருந்த போதிலும் அதன் பெறுமதிகள் குறிப்பிடப்பட்டிருக்காமையால் நிதிக் கூற்றுக்களில் அடங்கியுள்ள ரூபா 139.70 மில்லியனிற்கான இருப்புக்களின் பெறுமதியின் சரியான தன்மையை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியவில்லை. | காணப்படுகின்ற ரூபா 7.53 மில்லியனிற்கான வித்தியாசம் தொடர்பாக விரிவான இணக்கஞ் செய்தலொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த வித்தியாசத்திற்கு இரண்டு பிரதாக காரணங்களை இனங்கண்டுள்ளதுடன் கணக்குகளில் சீராக்கல் மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பேன். எதிர்காலத்தில் அறிமுகப்படுத்துவதற்கு எதிர்பார்த்துள்ள ஒன்றித்த மென்பொருள் முறைமை (ERP SYSTEM) உரிய அனைத்து பண்புகளும் அடங்கக் கூடியவாறு தேவையான நடவடிக்கைகள் தற்போதும் எடுக்கப்பட்டுள்ளது. | வித்தியாசங்களை இனங்கண்டு சரி செய்வதற்கும் மற்றும் ERP முறைமையை நிறுவி செயற்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 செலுத்த வேண்டிய தொகை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கணக்காண்டு இறுதியில் உள்ளவாறு அதிகார சபையின் பலவின கடன்கொடுத்தோரின் பெறுமதி ரூபா 4.43 மில்லியன் தொகை காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 3.29 மில்லியனுக்கான மீதிகள் பத்து வருடங்களுக்கு மிகையான காலம் முதல் தீர்த்திருக்கவில்லை. | இந்தத் தொகை பத்து வருடங்களுக்கு மிகையான காலம் முதல் தீர்க்கப்படாமைக்கு பிரதான காரணம் குறிப்பிட்ட ஊழியர்கள் அதிகார சபையிலிருந்து அகன்று சென்றிருந்த போதிலும் அவர்களை அகற்றும் செய்முறை உரிய முறையில் பூர்த்தி செய்திருக்காமையாகும். | செலுத்த வேண்டிய மீதிகள் காலரீதியாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவு சட்டத்தின் பிரிவு 5(1) | சேவை முடிவடைந்து 30 நாட்களுக்குள் பணிக்கொடை தொகையினை செலுத்த வேண்டிய போதிலும் மூன்று உத்தியோகத்தர்களுக்கு தாமதித்து பணிக்கொடை செலுத்திய காரணத்தினால் | ஏற்றுக்கொள்கின்றேன். | சேவை முடியவடைந்து 30 நாட்களுக்குள் குறிப்பிட்ட உத்தியோகத்தர்களின் பணிக்கொடை கொடுப்பனவு செய்ய வேண்டியதுடன் தாமதத்திற்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ரூபா 0.29 மில்லியனுக்கான மிகை விதிப்புத் தொகையொன்று செலுத்துவதற்கு அதிகார சபைக்கு நேரிட்டிருந்தது. | | பொறுப்பாகவுள்ள உத்தியோகத்தர்களை இனங்கண்டு அந்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் மற்றும் அதிகார சபைக்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை அறவீடு செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 இலக்கங் கொண்ட அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த செயற்பாட்டு கைநூலின் பிரிவுகள் 3.5 மற்றும் 6.8 | அதிகார சபைக்கு சொந்தமான இரண்டு வாகனங்கள் 2023 ஆண்டின் போது முறையான அங்கீகாரமின்றி அமைச்சின் அலுவல்களுக்காக விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அந்த வாகனங்களின் சாரதிகளுக்கு செலுத்திய சம்பளம், படிகள் மற்றும் எரிபொருளுக்காக செலவிடப்பட்டிருந்த தொகையினை அமைச்சிலிருந்து மீளளிப்புச் செய்திருக்கவில்லை. அதே போல் அதிகார சபையின் செவிப்புல, கற்புல இயக்குனர் பதவியில் ஊழியர் ஒருவர் 2007 மே மாதம் முதல் அமைச்சின் ஊடக அலகிற்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன், அவருக்கு செலுத்தியிருந்த சம்பளம், படிகள் மற்றும் மேலதிக நேர கொடுப்பனவுத் தொகையும் அமைச்சிலிருந்து மீளளிப்பு செய்திருக்கவில்லை. | சாரதியின் போக்குவரத்துச் செலவு மற்றும் வாழ்க்கைப் படி மற்றும் மேலதிக நேரம் என்பவற்றை அதிகார சபைக்கு மீளளிப்பு செய்யும் படி நினைவுருத்தல் கடிதம் அனுப்பப்பட்ட போதிலும் அந்த செலவுகள் மீளளிப்புச் செய்யப்படவில்லை. செவிப்புல கற்புல இயக்குனரின் சம்பளம் மற்றும் ஏனைய படிகளுக்காக செலவிடப்படும் தொகையை அமைச்சில் இருந்து மீளளிப்புச் செய்யும் படி அமைச்சுச் செயலாளரிடம் பல கடிதங்கள் அனுப்பப்பட்ட போதிலும் குறிப்பிட்ட தொகை மீளளிப்புச் செய்தல் மேற்கொள்ளப்படவில்லை. | குறிப்பிட்ட பணத்தினை மீளளிப்புச் செய்யப்பட வேண்டியதுடன் அதிகார சபையின் வளங்கள் ஏனைய நிறுவனங்களுக்கு விடுவிக்கும் போது சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (இ) | 1992 ஜனவரி 25 திகதிய 03/92 இலக்கங் கொண்ட பொதுநிருவாகச் சுற்றறிக்கை | சேவைக்கு வரவேண்டிய நேரத்தின் பின் தாமதித்து வரும் நேரத்தை அணவல் செய்யப்பட வேண்டிய போதிலும் சில ஊழியர்கள் தாமதத்தை அணவல் செய்திருக்காததுடல் அதற்காக விடுமுறைகளில் | அங்கீகரிக்கப்பட்ட சுற்றறிக்கையின் படி தாமத சந்தர்ப்பத்தை மிகைத்துள்ள சேவைக்கு வந்துள்ளவர்களின் தாமதத்தை அவர்களின் சுருக்க விடுமுறையில் இருந்து | பொது நிருவாகச் சுற்றறிக்கையின் படி அணவல் செய்யாத தாமதங்களை விடுமுறைகளிலிருந்து கழிப்பதற்கு நடவடிக்கை எடுக்க |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இருந்து கழித்தலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கழிக்கப்படுவதுடன் அவை முடிவடைந்த பின்னர் விடுமுறைகளில் இருந்து கழிக்கப்படும். | வேண்டும். |
| (ஈ) | 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 இலக்கங் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கை | உள்வருதல் மற்றும் வெளிச் செல்லலை உறுதிப்படுத்துவதற்காக விரலடையாள இயந்திரம் பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும் 08 மாவட்ட ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்கள் அவ்வாறு செய்திருக்கவில்லை. | ஒரு மாவட்ட ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் மாத்திரம் நியமனம் செய்யப்பட்டிருப்பதனால் மாவட்ட ஒருங்கிணைப்பு அலுவலகம் நிறுவப்பட்டிருக்காததுடன், அதன் படி இந்த உத்தியோகத்தர்களின் உள்வருதல் மற்றும் வெளிச்செல்லல் அறிக்கைகள் சான்றுபடுத்துவதற்காக மேற்கொள்ளப்படுவது அவர்களுக்கு அலுவலக வசதிகள் வழங்கப்பட்டுள்ள ஏனைய அரச நிறுவனங்களின் மூலம் ஆகும். | மாவட்ட ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்களின் உள்வருதல்/ வெளிச்செல்லல் குறிப்பிட்ட அரச நிறுவனங்களின் விரலடையாள இயந்திரத்தை பயன்படுத்தி பெற்றுக் கொள்வதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 66.63 மில்லியனிற்கான மிகையொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 26.88 மில்லியன் தொகை ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 39.75 மில்லியனுக்கான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக தேசிய தொழில் தகைமைகள் (NVQ) பயிற்சிப் பாடநெறி வருமானம் ரூபா 9.65 மில்லியன் தொகையினாலும், ஒப்பந்தக்காரர்கள் பதிவு செய்தல் வருமானம் ரூபா 22.54 மில்லியனினாலும் மற்றும் பயிற்சிப் பாடநெறிகளின் மூலம் வருமானம் ரூபா 10.48 மில்லியனினாலும் அதிகரித்திருத்தல் பிரதானமான காரணமாக இருந்தது.

**2.2 பிரதான வருமானங்கள் மற்றும் செலவுகள் விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு**

| **விபரம்** | **நடைமுறை ஆண்டில் பெறுமதி** (ரூபா மில்லியன்) | **முன்னைய ஆண்டில் பெறுமதி** (ரூபா மில்லியன்) | **வித்தியாசம் அதிகரித்தல்/ (குறைவடைதல்)** (ரூபா மில்லியன்) | **வித்தியாசத்தின் சதவீதம்** நூற்றிற்கு |
|---|---|---|---|---|
| **வருமானங்கள்** | | | | |
| செயற்பாட்டு வருமானங்கள் | 337.18 | 291.69 | 45.49 | 16 |
| செயற்பாடற்ற வருமானங்கள் | 5.43 | 11.1 | (5.68) | (51) |
| அரச மானியங்கள் மற்றும் கட்டுநிதிகள் | 168.71 | 162.41 | 6.3 | 4 |

| | | | | |
|---|---|---|---|---|
| **செலவுகள்** | | | | |
| செயற்திட்ட செயற்பாட்டுச் செலவுகள் | 35.31 | 67.54 | (32.23) | (48) |
| நிருவாகச் செலவுகள் | 229.55 | 203.58 | 25.97 | 13 |
| பராமரிப்புச் செலவுகள் | 78.17 | 77.58 | 0.59 | 1 |
| ஆய்வுகள், அபிவிருத்தி மற்றும் பயிற்சிச் செலவுகள் | 33.11 | 32.09 | 1.02 | 0 |

### 2.3 விகிதாசார பகுப்பாய்வு

அதிகார சபையின் மீளாய்வாண்டின் நடைமுறை விகிதாசாரம் 4:1 காணப்பட்டதுடன் முன்னைய ஆண்டின் போது அது 3:1 ஆகக் காணப்பட்டது. அதிகார சபையின் திடீர் சொத்து விகிதாசாரம் கடந்த ஆண்டின் போது 2:1 சதவீதமாகக் காணப்பட்டதுடன், மீளாய்வாண்டின் போது அது 3:1 வரை அதிகரித்தல் ஆகும். மேலும் சொத்துக்களின் மீது நலன்கள் விகிதாசாரம் கடந்த ஆண்டில் 2 சதவீதமாகக் காணப்பட்டதுடன், மீளாய்வாண்டின் போது அது 5 சதவீதம் வரை அதிகரித்திருந்தது. மீளாய்வாண்டின் மிகை முன்னைய ஆண்டிற்கு நேரொப்ப 148 சதவீதத்தினால் அதிகரித்திருத்தல் சொத்துக்கள் மீது நலன்கள் விகிதாசாரம் இந்த அதிகரிப்பிற்கு அடிப்படையான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப் பணிப்பாளரின் சேவையை முடிவுறுத்தியதனால் அதற்கு எதிராக அவரினால் அதிகார சபைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் நிலுவை சம்பளத்தை செலுத்தி அவரை மீண்டும் பதவியில் அமர்த்துமாறு வழங்கியிருந்த தீர்ப்பினை செயற்படுத்தாமல் அது தொடர்பாக மேற்முறையீடொன்று அதிகார சபையினால் தாக்கல் செய்யப்பட்டு அதற்காக ரூபா 1,750,000 இற்கான செலவொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. பின்னர் அந்த வழக்கு அதிகார சபையினால் 2024 ஆண்டின் போது அகற்றப்பட்டிருந்ததுடன், அதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த செலவு சிக்கனமற்ற செலவொன்றாகக் காணப்பட்டது. | தொடர்ந்தும் இந்த மேன்முறையீட்டு முன் எடுத்துச் செல்வதற்கு தேவையப்பாடொன்று காணப்படாமையால் எமது நிறுவனத்தின் முகாமைத்துவச் சபையினால் தீர்மானிக்கப்பட்டவாறு இந்த மேன்முறையீட்டு வழக்கிலிருந்து விலகிக் கொண்டது. இந்த மேன்முறையீடு தாக்கல் செய்த சந்தர்ப்பத்தில் அவ்வாறான நிலைமையொன்று ஏற்படுமென எதிர்வுகூறுவதற்கு முடியாது என அழுத்திக் கூற விரும்புகின்றேன். | பிழையான முகாமைத்துவத் தீர்மானங்களுக்காக காரணங்களை கண்டறிந்து எதிர்காலத்தில் சிக்கனமற்ற செலவுகளை தடுத்துக் கொள்வதற்கும் மற்றும் பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினர்களிடம் இந்தத் தொகையினை அறவீடு செய்வதற்கும் தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகார சபையினால் நடாத்தப்படுகின்ற பெலவத்த, பத்தரமுல்லையில் அமைந்துள்ள நிர்மாண உபகரண பயிற்சி நிலையம் (CETRAC) அமைந்துள்ள காணி நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு உரித்தான காணி ஒன்றாக காணப்படுவதுடன், அதிகார சபையினால் அதில் நிர்மாணிக்கப்பட்டுள்ள ரூபா 306.15 மில்லியனுக்கான கிரயத்தை கொண்டிருந்தது. இந்தக் காணி தொடர்பாக முறைப்பிரகாரம் குத்தகை உடன்படிக்கையொன்று அணுகுவதற்கு மீளாய்வாண்டு இறுதிவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதே போல் கல்குளமவில் அமைந்துள்ள அதிகார சபையின் இயக்குனர் பயிற்சிக் கல்லூரி (OTC) மற்றும் கதிர்காமம் சுற்றுலா விடுதி அமைந்துள்ள காணிக்காக உரிய தரப்பினர்களுடன் இதுவரை அறுதியான குத்தகை உடன்படிக்கைகளுக்கு அணுகியிருக்கவில்லை. | நிர்மாண வேலை இயந்திர உபகரண பயிற்சி நிலையம் அமைந்துள்ள காணி நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் நீண்டகால குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபையினால் முறையான அங்கீகாரம் பெற்றுக் கொண்ட பின்னர் நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br>கல்குளமவில் அமைந்துள்ள நிர்மாணவேலை இயக்குனர் பயிற்சிக் கல்லூரி நீண்டகால குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்காக தேவையான சத்தியக் கடதாசி உரிய முறையில் கையொப்பமிடப்பட்டு திரப்பனை பிரதேச செயலகத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.<br><br>கதிர்காமம் சுற்றுலா விடுதி அமைந்துள்ள காணி நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான காணியொன்றாக காணப்படுவதுடன் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் முறையான அங்கீகாரம் பெற்ற பின்னர் எமது நிறுவனத்துடன் நீண்டகால குத்தகை உடன்படிக்கைக்கு அணுக முடியுமாகும். | குறிப்பிட்ட ஆதனங்கள் தொடர்பாக முறையான உடன்படிக்கைகளுக்கு அணுகுதல் மற்றும் உடன்படிக்கையின் பிரிவுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தலும் தாமதமின்றி மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | நிர்மாணவேலை இயந்திர இயக்குனர் பயிற்சிக் கல்லூரி (OTC) இன் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கான செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்காக அரசினால் 2018 ஆண்டு முதல் 2024 ஆண்டு வரை ரூபா 163.37 மில்லியனுக்கான ஏற்பாடுகள் வழங்கியிருந்ததுடன், இந்த செயற்திட்டத்தை செயற்படுத்துவதன் | 2020 – 2022 பல வருடங்களில் நடைபெற்ற தொற்றுநோய் நிலைமை மற்றும் பொருளாதார நெருக்கடியின் முன்னிலையில் பௌதீக ரீதியாக பயிற்சி வழங்கள் வரையறுக்கப்பட்டதுடன் எரிபொருள் உட்பட பண்டங்களின் மற்றும் உதிரிப்பாகங்களின் விலை | குறிக்கோள்கள் மற்றும் கருமங்கள் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மூலம் நிர்மாணவேலைத் துறைக்கு சேர்க்கப்படும் தொழிற்தேர்ச்சியாளர் எண்ணிக்கை 1000 இனை மிகைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும் 2024 ஆண்டின் போது 10 பயிற்சி பாடநெறிகள் மூலம் தொழிற்தேர்ச்சியாளர்கள் 577 பேர் மாத்திரம் உருவாக்கப்பட்டிருந்தது. அதன்படி அரசினால் தேவையான வசதிகள் வழங்கப்பட்டு செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.<br>மேலும் திட்டமிடப்பட்டுள்ள 11 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மாத்திரம் பல வருடங்கள் முதல் நடாத்தியிருக்காததுடன், செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி சில பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக கிடைத்திருந்த வருமானம் போலவே பங்குபற்றிய ஆட்களும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. அதன்படி சில பாடநெறிகள் நடாத்தப்பட்ட செலவுகளை அணவல் செய்யக் கூடிய அளவு வருமானமொன்று கிடைத்திருக்கவில்லை. | மிகவும் அதிகரித்திருந்ததனால் பாடநெறிக் கட்டணங்களை திருத்துவதற்காக நேரிட்டமையால் தொழிற்பயிற்சி வழங்கல்கள் குறைவடைந்திருந்தது. எனினும் இலக்காகிய தொழில் பாடநெறிகளை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு பல்கலைக்கழக மாணவர்களுக்காக பாடநெறிகள் வடிவமைப்பதன் மூலம் 2024 ஆண்டளவில் 1017 ஆட்களுக்காக பயிற்சி வழங்கும் செயற்திட்டத்தை செயற்படுத்தியதன் மூலம் வெற்றிகரமான விளைவு ஏற்பட்டிருந்தது. | |
| (இ) | அதிகார சபையின் தலைமை அலுவலகத்தின் கூரையின் திருத்த வேலைக்காக 2022 ஆண்டின் போது பெறுகை வழிகாட்டலுக்கு இணக்கமின்றி ஒப்பந்தவேலைக்காரர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன் ஒப்பந்த வேலையாளரினால் மதிப்பீட்டில் காட்டப்பட்டுள்ள சில வேலைப் பகுதிகளை அகற்றி மற்றும் சில வேலைப் பகுதிகளை குறைத்து அதே வேலை ரேட்டின் படி ஒப்பந்த வேலையை ரூபா 5.6 மில்லியன் தொகைக்கு ஒப்புக் கொள்ளப்பட்டிருந்தது. 2023 ஜுன் 27 திகதி குறிப்பிட்ட கருமம் பூர்த்தி செய்த பின்னர் பல இடங்களில் கட்டிடத்தினுள் மழைநீர் கசியப்படுகின்றது எனவும் மற்றும் சிவிலினில் சில இடங்கள் உடைந்து வீழ்ந்திருந்தது எனவும் மற்றும் சில பகுதிகள் முழுமையற்றவை என அவதானிக்கப்பட்ட போதிலும் குறைகளை சரி செய்யப்படும் காலம் முடிவடைந்து 2025 ஏப்ரல் 30 திகதி | சீடா இணையதளத்தில் அறிவித்தலொன்று வெளியிடப்பட்டு C-6 பதிவு செய்யப்பட்ட நிர்மாண வேலை நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்டு ரூபா 5.59 மில்லியன் தொகைக்கான அத்தியவசியமான திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு 2023 ஜுன் 27 ஆந் திகதி இந்த ஒப்பந்தவேலை பூர்த்தி செய்யப்பட்டு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன், அதற்குரிய கொடுப்பனவு அலுவல்களும் மேற்கொள்ளப்பட்டது.<br><br>உடன்படிக்கையின் படி பராமரிப்புக் காலம் தற்போது முடிவடைந்துள்ளதுடன் மேற்கூறிய குறைகள் சரி செய்யப்படாமையால் மொத்த ஒப்பந்தவேலை தொகையின் தடுத்துவைத்தல் பணம் | திருத்தவேலை தொடர்பாக காணப்படுகின்ற குறைபாடுகளை விரைவாக சரி செய்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அளவிலும் அந்த குறைபாடுகளை செப்பனிடுவதற்கு அதிகார சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இதுவரை நிறுவனத்தினால் கொடுப்பனவு செய்யப்படவில்லை. | |
| (ஈ) | அதிகார சபைக்கு சொந்தமான நீர் பவுசர் ஒன்று 2020 ஜூலை 20 திகதி திடீர் விபத்துக்குள்ளாகி இருந்ததுடன் வாகனத்தை திருத்த வேலை மேற்கொள்வதற்காக ரூபா 2.58 மில்லியன் தொகையொன்று செலவிடப்பட்டிருந்த போதிலும் காப்புறுதி கூட்டுத்தாபனத்திலிருந்து நட்டஈட்டுத் தொகை என செலவிடப்பட்ட தொகையில் 50 சதவீதம் அதாவது ரூபா 1.29 மில்லியன் மாத்திரம் 2023 ஜூலை 14 திகதி செலுத்தப்பட்டிருந்தது. அதன்படி மீதித் தொகை 2025 பெப்ரவரி 28 திகதி அளவிலும் காப்புறுதி கூட்டுத்தாபனத்திடம் பெற்றுக் கொள்ள முடியாமல் இருந்தது. | 2025 ஏப்ரல் 29 திகதி தலைவரின் தலைமைத்துவத்தில் நடத்தப்பட்ட கூட்டத்தில் வழங்கப்பட்ட அறிவுரையின் படி அரச தொழில்முயற்சித் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் தலையீட்டுடன் மீண்டும் வேண்டப்பட்டு 2025 மே 16 திகதி கடிதமொன்று அனுப்பப்பட்டது. மேலும் முழு நட்டஈட்டுத் தொகையையும் செலுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டு பின்னர் அதன் பகுதியொன்று மாத்திரம் செலுத்தப்பட்டிருத்தல் தொடர்பாக தொடர் நடவடிக்கைக்காக கௌரவ சட்டமா அதிபரின் ஆலோசனை பெற்றுக் கொள்வதற்காக கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளது. | காப்புறுதியிலிருந்து இதுவரை மீளளிப்புச் செய்யப்படாத தொகையை மீண்டும் பெற்றுக் கொள்வதற்கும் எதிர்காலத்தில் இவ்வாறான நட்டஈட்டுத் தொகைகள் காலரீதியாகப் பெற்றுக் கொள்வதற்கு உரியவாறு உள்ளக கட்டுப்பாட்டு முறைமையை வலுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | நிர்மாண வேலைத் துறையில் ஈடுபட்டுள்ள கலைஞர்களுக்கான கலைஞர் அடையாள அட்டைகள் வழங்குவதற்காக 2019 முதல் 2020 ஆண்டுகளின் போது திறைசேரியில் இருந்து ரூபா 35.77 மில்லியனுக்கான தொகையொன்று வழங்கப்பட்டிருந்தது. அதற்குரிய தகவல் தொழிநுட்ப முறைமையொன்று நிறுவுவதற்காக ஸ்ரீலங்கா டெலிகொம் நிறுவனத்திற்கு ரூபா 0.83 மில்லியன் தொகையொன்று செலுத்தப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய முறைமையின் அபிவிருத்தி அலுவல்கள் 2025 ஏப்ரல் 30 திகதி வரை பூர்த்தி செய்திருக்கவில்லை. மேலும் தொழிற்தேர்ச்சிக்கான கலைஞர்களுக்காக அடையாள அட்டைகள் வழங்குவதற்கு முன்னர் அதற்குரிய விதிகள் மற்றும் கட்டணங்கள் வர்த்தமானியில் பிரசுரித்து அதன் பின்னர் உரிய கட்டணங்களை அறவீடு செய்தல் சட்ட நிலைமையாக காணப்பட்ட போதிலும் அதிகார சபையினால் இதுவரை அதற்குரிய விதிகள் மற்றும் கட்டணங்கள் வர்த்தமானியில் | இலங்கை டெலிகொம் நிறுவனத்தினால் பூர்த்தி செய்யப்பட்ட நிகழ்வுநிலை ஊடாக நிர்மாணவேலை கலைஞர்களை பதிவு செய்வதற்காக தயாரிக்கப்பட்ட மென்பொருள் முறைமையில் காணப்படும் செய்முறைசார் சிக்கல்கள் தொடர்பாக கவனம் செலுத்தி அவற்றை தீர்த்துக் கொண்டு மீண்டும் தயாரிக்கப்பட்ட மென்பொருள் முறைமை நிர்மாண வேலை கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை (CIDA) இற்கு வழங்கப்பட்டிருந்தது. 2025 மே 29 திகதி முதல் முழுமையாக தேர்ச்சியாளர்களுக்கு வழங்கப்படவுள்ளது. இதற்குத் தேவையான சட்ட அதிகாரங்கள் 2014 இன் 33 ஆம் இலக்க நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் பிரிவுகள் 48 மற்றும் 49 மூலம் கிடைத்துள்ளதுடன் உரிய கட்டளைகள் | தொழிற்தேர்ச்சிக் கலைஞர்களுக்காக அறிமுக அட்டைகள் வழங்குவதற்குரிய விதிகள் மற்றும் கட்டணங்கள் விரைவாக தயாரிக்கப்பட்டு வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பிரசுரிக்காமல் இதற்கான விண்ணப்பம் அழைக்கப்பட்டு அவர்களிடம் கட்டணம் அறவீடு செய்யப்பட்டிருந்தது. இவ்வாறு கட்டணங்கள் அறவீடு செய்து மீளாய்வாண்டு இறுதியளவில் 824 அடையாள அட்டைகள் வழங்கப்பட்டிருந்தது. | (Regulations) தற்போது வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. மேலும் உரிய விதிகள் (Rules) தயாரிக்கும் அலுவல்கள் சட்டமா அதிபர் திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்படுவதுடன் இறுதிக் கட்டத்தில் காணப்படுகின்றது. 2021 அதில் காணப்படுகின்ற கூறுவிலைகளுக்காக பணிப்பாளர் சபை அங்கீகாரத்துடன், பதிவுசெய்தல் மற்றும் அறிமுக அடையாள அட்டைகள் வழங்குதல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | |
| (ஊ) | அதிகார சபையின் கருமங்களை உலகளாவிய ரீதியில் நடாத்திச் செல்வதற்காக மாவட்ட 14 கூட்டிணைப்பு அலுவலகங்கள் செயற்படுத்தப்படுவதுடன், மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி அந்த அலுவலகங்களின் மூலம் நெருங்க வேண்டிய இலக்குகள், நெருங்க வேண்டிய காலம் மற்றும் செயலாற்றுகை சுட்டிகள் அறுதியாக காட்டப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக பிராந்திய அலுவலகங்களின் செயலாற்றுகை சுட்டிகள் அருதியாக குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக பிராந்திய அலுவலகங்களின் செயலாற்றுகையை பரிசோதனை செய்ய முடியவில்லை. அதே போல் இந்த உத்தியோகத்தர்களின் செயலாற்றுகைக்காக முறையான வழிகாட்டல் ஒன்றுடனான கூட்டிணைப்பு குறிப்பிட்ட பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.<br><br>இந்த பிராந்திய அலுவல்களின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற சில கருமங்களை நிகழ்வுநிலையில் மேற்கொள்வதற்கு இயலுமாக இருந்ததென கணக்காய்வின் போது | முகாமைத்துவத்தினால் கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | பிராந்திய அலுவலகங்களின் செயலாற்றுகை காலரீதியாக பரிசோதனை மேற்கொள்ளக் கூடியவாறு இலக்குகள் மற்றும் செயலாற்றுகை சுட்டிகள் அறுதியாக அறிமுகப்படுத்தி முன்னேற்றத்தை பரிசோதனை செய்வதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அவதானிக்கப்பட்டதுடன் ஜனவரி முதல் ஜூன் வரை வேலைத் தளப் பரிசோதனைகள் 06 மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |
| (எ) | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் படி மீளாய்வாண்டிற்காக கதிர்காமம் சுற்றுலா விடுதி 57 ஒதுக்குதல்கள் (Reservation) மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் சுற்றுரலா விடுதியை நடாத்துவதன் மூலம் ரூபா 0.98 மில்லியன் நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. | 2025 பெப்ரவரி 27 திகதி நடைபெற்ற முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி 2025 மார்ச் 05 திகதி கடிதத்தின் மூலம் உடனடியாக செயற்படுமாறு சுற்றுலா விடுதியில் தங்கும் வசதிகளுக்காக ஒதுக்குதல் நிறுத்தப்பட்டுள்ளது. இதனை திருத்த வேலை மேற்கொள்ளும் மட்டத்தில் காணப்பட்ட பழைய கட்டிடமொன்றாகக் காணப்பட்டதால் இந்த திருத்த வேலைக்காக பாரிய செலவொன்று செலவிட நேரிடுவதை கவனத்தில் எடுத்து முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்துடன் டென்டர் அழைத்தலின் மூலம் வெளித்தரப்பினருக்கு சுற்றுலா விடுதியை நடாத்திச் செல்வதற்காக வழங்குவதற்கு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | கதிர்காமம் சுற்றுலா விடுதி இலாபகரமாக பேணிச் செல்வதற்கு தேவையான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு முறையான மேற்பார்வையுடன் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**3.3 செயற்பாட்டுத் திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2014 இன் 33 இலக்க நிர்மாணவேலை கைத்தொழில் அபிவிருத்தி சட்டத்தில் காட்டப்பட்டுள்ள கருமங்கள் இடையே சட்டத்தின் 33 ஆம் பிரிவின் படி வெளிநாட்டு ஆலோசகர்கள் அதிகார சபையின் பதிவு செய்வதற்கான பதிவு செய்தல் நடவடிக்கை முறைமையொன்று விதிப்பதற்கும் சட்டத்தின் 51 ஆவது பந்தியின் பிரகாரம் தொழிற்பிணக்குகள் தீர்ப்பதற்குரிய நடவடிக்கை முறைகள் தயாரிப்பதற்கும் மற்றும் சட்டத்தின் 55 ஆவது பிரிவின் படி தகவல் செயலகமொன்று நிறுவி அதன் செய்பணிகள் மற்றும் கருமங்களை நடவடிக்கை முறைகள் மற்றும் செயலாற்றுகை நியமங்களை விதித்தல் ஆகிய கருமங்கள் நிறைவேற்றுவதற்காக அதிகார | வெளிநாட்டு ஆலோசகர்கள் தகைமையுடைய ஆட்கள் என பதிவு செய்வதற்கு உரிய பிரமாணங்கள் தயாரிக்கப்பட்டுள்ளது. பிணக்கு தீரத்தல் (Adjudication) தொடர்பான நடவடிக்கை முறை தயாரிக்கப்பட்டுள்ளதுடன் 2017 நவம்பர் 28 ஆந் திகதி அமைச்சிற்கு மற்றும் சட்டவரைஞருக்கு முதல் தடவையாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. தகவல்கள் செயலகம் நிறுவுவதற்குத் தேவையான தகவல் தொழிநுட்ப அலுவல்களில் பிரிவு 55 (a) நடைமுறைப்படுத்துவதற்கு | நிர்மாணவேலை கைத்தொழில் அபிவிருத்தி சட்டத்தில் காட்டப்பட்டுள்ள கருமங்களை செயற்திறனுடன் மற்றும் ஆக்கபூர்வமாக நிறைவேற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் தாமதமின்றி மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சபைக்கு முடியாமல் இருந்தது. அதே போல், மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 46 இன் படி அதிகார சபையினால் நியம விலைகூறல் ஆவணங்கள் (Standard Bidding Documents) தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், நிர்மாண வேலை பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டிருந்த விலைகூறல் ஆவணம் SBD – 03 (பெறுகை – வேலை – Minor), SBD – 02 (பெறுகை – வேலை – Major), SBD – 04 (Design and Build) இதுவரை திருத்தப்பட்டிருக்கவில்லை. | தேவையான அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டு தரவுகள் வழங்குவதற்கு அனைத்து வங்கிகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. மேலும் இலங்கையின் அனைத்து செயற்திட்டங்களிதும் தரவுகள் சேகரிப்பதற்குரிய அரச நிறுவனங்களுக்கு தரவு மேலேற்றம் செய்வதற்கு தேவையான தொடர்புகள் அமைச்சின் ஊடாக அனுப்பட்டுள்ளது.<br><br>SBD – 03 ஆவணம் குறிப்பிட்டவித்தியாயசங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் 2025 முகாமைத்துவ சபைக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது.<br>தற்போது SBD – 02 மற்றும் SBD – 04 தேவையான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | |
| (ஆ) | மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் முன்னேற்றத்தை பரிசோதனை செய்த போது ஆதனங்களை அபிவிருத்தி செய்பவர்களை பதிவு செய்தல், கட்டிடப் பொருட்கள் வழங்குனர்களை பதிவு செய்தல், தகைமையுடைய நபர்களை பதிவு செய்தல், நிர்மாணவேலை இடங்களில் சுகாதார மற்றும் பாதுகாப்பு நிலைமைகளை முகாமைத்துவம் ஆகியவற்றை அவதானிப்புக்களுக்காக அவதானிப்புக் குழுக்கள் அனுப்புதல், பசுமை கட்டிடங்கள் வழங்குனர்களை பதிவு செய்தல், வேலைத் தளங்களை நுண்பரிசோதனை மற்றும் மத்திய மட்ட தொழிநுட்ப உத்தியோகத்தர்களை பதிவு செய்தல், வெளிநாட்டு ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்தல், தொழிநுட்ப கணக்காய்வு மேற்கொள்ளல், அதிகார சபையின் ஒட்டுமொத்த பதவியணி அடங்கக் கூடியவாறு உள்நாட்டு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்துவதன் மூலம் உத்தியோகத்தர்களின் அறிவு மற்றும் | இந்த பதிவு செய்தலின் ஆரம்பித்தலை வலுவூட்டுவதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபை (UDA) கலந்துரையாடப்பட்டதுடன், அவர்கள் அதிகார சபையில் பதிவு செய்தகளில், அவர்களின் கட்டிட அங்கீகரித்தல் செய்முறையில் உட்படுத்துவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த மூலோபாய ஒத்துழைப்பு ஊடாக பதிவு செய்தலின் பெறுமதியை அதிகரிப்பதற்கு மற்றும் எதிர்காலத்தில் ஆதனங்களை அபிவிருத்தி செய்வோர்களின் கூடிய பங்களிப்பொன்றை மேம்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.<br>பண்டங்கள் வழங்குவோரின் பதிவேடுகள் அதிகார சபையின் இணைய தளத்தில் பெற்றுக்கொள்ள முடியும். அதிகார சபையில் பதிவு செய்துள்ள வழங்குனர்கள் | முறைசார் திட்டங்கள் மற்றும் இலக்குகள் தயாரிக்கப்பட்டு நிர்மாணவேலை கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தில் காட்டப்பட்டுள்ள கருமங்களை செயற்திறனுடன் மற்றும் ஆக்கபூர்வமாக நிறைவேற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் தாமதமின்றி எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| திறமையை அதிகரித்தல், நுண்ணாய்வு மட்டத்தில் முகாமையாளர்கள் மற்றும் திறந்தொழில் மட்டத்தில் ஏனைய உத்தியோகத்தருக்கு பயிற்சி வழங்குதல், நிர்மாணவேலை உபகரணங்களின் பராமரிப்பு மற்றும் இயக்கும் தொழிநுட்பம் தொடர்பான தொழிற்தேர்ச்சி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் ஆகிய கருமங்களில் மீளாய்வாண்டின் போது செயலாற்றுகை 50 சதவீதத்தை விட குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | வருடாந்த வழங்குனர்களை பதிவு செய்யும் செய்முறையில் உட்படுத்தும் படி வேண்டி அனேக அரச நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அதிகார சபையில் பதிவு செய்துள்ள வழங்குனர்களிடம் நிர்மாணவேலை பண்டங்கள் கொள்வனவு செய்வதற்கு அரச நிறுவனங்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதுடன் உரிய மாவட்டங்கள் பூராகவும் மாவட்ட ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்கள் (DCO) ஊடாக மேம்படுத்தல் அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. வெளிநாட்டு கம்பனிகள் பதிவு செய்வதற்கான ஒழுங்குறுத்தலின் இறுதி வரைவு தற்போது முகாமைத்துவ சபைக்கு அங்கீகாரத்திற்காக முறைப்பிரகாரம் மீண்டும் சமர்ப்பிப்பதற்கு தயார் நிலையில் உள்ளது. மாவட்ட ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்கள் (DCOs) மற்றும் தலைமை அலுவலகத்தின் பதவியணியினர் அடங்கிய அவதானிப்புக் குழு, தெரிவு அடிப்படையில் வேலைத் தளங்களை அவதானிப்பதற்கு வருவதுடன், எதிர்பார்த்த இட சுற்றுலாக்களின் எண்ணிக்கையை பேணிச் செல்வதில் சவால்களுக்கு முகங்கொடுக்க நேரிட்டுள்ளது. | |

### 3.4 சர்ச்சைக்குரிய தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| டவர் ஹோல் அரங்க மண்டப மன்றத்திற்கு சொந்தமான காணியொன்றில் அதிகார சபை நடாத்திச் செல்லப்படுவதுடன் அதற்காக இரு தரப்பினராலும் 2016 ஆண்டின் போது கையொப்பமிடப்பட்ட ரூபா 6 மில்லியனுக்கான குத்தகை உடன்படிக்கை பழைய குத்தகை | டவர் ஹோல் அரங்க மண்டபம் மற்றும் நிர்மாணவேலை கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையிடையே புதிய குத்தகை உடன்படிக்கையின் குத்தகை பெறுமதியை திருத்துவதற்கு இரு தரப்பினராலும் | இரு தரப்பினரின் இணக்கப்பாட்டின் மீது சரியான மற்றும் நியாயமான குத்தகை உடன்படிக்கை ஒன்றிற்கு அணுகுவதற்கு நடவடிக்கை எடுத்து அதன் பிரிவுகளுக்கு |

| | | | |
|---|---|---|---|
| | உடன்படிக்கையின் பெறுமதிக்கு சமமாக காணப்பட்டமையால் குத்தகைத் தொகை திருத்தப்படாமை தொடர்பாக குத்தகை வழங்கியவரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஒன்றித்த அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்காக வழங்கியிருந்த அங்கீகாரத்தின் மீது டவர் ஹோல் அரங்க மண்டப மன்றத்திற்கு ரூபா 145 மில்லியன் தொகை (கணிக்கப்பட்ட முறை விளக்கப்படவில்லை) செலுத்துவதற்கு அதிகார சபைக்கு நேரிட்டிருந்தது. தற்போது காணப்படும் குத்தகை உடன்படிக்கையை இரத்துச் செய்தல், திருத்தம் மேற்கொள்ளல் அல்லது புதிய உடன்படிக்கையொன்றிற்கு அணுகாமல் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் மீது அவற்றில் ரூபா 25 மில்லியனுக்கான முற்பணத் தொகையொன்று 2024 செப்தெம்பர் 06 திகதி செலுத்தப்பட்டிருந்தல் கணக்காய்வில் சிக்கல் நிலைமை ஒன்று அவதானிக்கப்பட்டது. | இணக்கப்பாட்டிற்கு வந்திருக்கவில்லை. எவ்வாறாயினும் 2004.07.09 திகதிய அமைச்சரவை தீர்மானத்திற்கு மதிப்பளிக்கும் முகமாக (அந்த தீர்மானத்திற்கு எமது நிறுவனம் இணங்காவிடின் புதிய அமைச்சரவை விஞ்ஞாபனம் ஒன்றின் மூலம் அதனை மாற்றிக்கொள்ளும் அடிப்படையில்) இவ்வாறு ரூபா 25 மில்லியனிற்கான முற்பணத் தொகையொன்று எமது நிறுவனத்தினால் டவர் ஹோல் அரங்க மண்டப மன்றத்திற்கு செலுத்தப்பட்டது. | இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.5 விளைவற்ற அல்லது குறைபயன்பாட்டு ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கல்குளம OTC யில் பயிற்சி வழங்குவதற்காக பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள் அனேகமானவை செயற்படாத நிலைமையில் காணப்பட்டதுடன் அந்த உபகரணங்கள் பல்வேறு இடங்களில் நிறுத்தப்பட்டிருந்தமையால் பாரிய இடவசதியொன்று ஒதுக்கப்பட்டிருந்தது. சேதமுற்ற நிலைமையில் காணப்பட்ட இயந்திர உபகரணங்கள் மற்றும் வாகனங்கள் 11 காணப்பட்டதுடன், அவற்றை அப்புறப்படுத்துவதற்கு மற்றும் 11 இயந்திர உபகரணங்கள் மற்றும் வாகனங்கள் திருத்த வேலை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன் 2017 ஆண்டில் ரூபா 7.9 மில்லியன் தொகை செலவிடப்பட்டு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக பயன்படுத்துவதற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த சிமியுலேடர் இயந்திரம் 2023 மார்ச் | தொழிநுட்ப கோளாரின் காரணமாக இயந்திரத்தை திருத்த வேலை மேற்கொள்வதற்காக அனுப்பப்பட்டது. எனினும் அந்த இயந்திரத்தின் தேவைப்பாடு மற்றும் கட்டளைகள் மூலம் உற்பத்தி செய்யப்படுகின்ற பண்டங்களாக காணப்படுவதனால் பொதுவான சந்தைகளில் திருத்தவேலை மேற்கொள்ள முடியாது. உரிய மென்பொருள் மற்றும் வன்பொருள் முறைமையின் பகுதிகள் உள்நாட்டுச் சந்தையில் பெற்றுக்கொள்வதற்கு முடியாத காரணத்தினால் திருத்த வேலைக்காக சில பாகங்களை சீன தாய் கம்பனிக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் இந்த | செயற்படாத நிலைமையில் காணப்படுகின்ற இயந்திர உபகரணங்கள் மற்றும் வாகனங்களை திருத்த வேலை மேற்கொள்வதற்கும் அவ்வாறு திருத்தவேலை மேற்கொள்ள முடியாத சொத்துக்களை அப்புறப்படுத்துவதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மாதம் முதல் செயற்படாது காணப்பட்டதுடன் இயந்திரம் இரண்டு வருடங்களுக்கு அண்மித்த காலம் திருத்தம் மேற்கொள்ளப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. | தொழிநுட்ப செய்முறைகளின் முடிவடைதலுக்காக கணிசமான காலமொன்று எடுக்கின்றது. தற்போது உரிய மென்பொருள் மற்றும் வன்பொருள் முறைமைகளின் பகுதிகள் திருத்த வேலையின் பின்னர் நிறுவனத்திற்கு கிடைத்துள்ளதுடன் திருத்தவேலைகள் கடைசிக் கட்டத்தில் காணப்படுகின்றது. | |
| (ஆ) | கல்குளத்தில் அமைந்துள்ள இயக்குனர் பயிற்சிக் கல்லூரி வளவாளர்கள் தங்கியிருப்பதற்காக ரூபா 23.56 மில்லியன் செலவொன்று மேற்கொண்டு கட்டிடமொன்று 2020 ஆண்டில் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் இந்த கட்டிடத்தின் நிர்மாண வேலைக்காக பிரதேச சபைக்கு கட்டிடத்தின் வரைபினை சமர்ப்பித்து அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை. அதே போல் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்ட பின்னர் வதிவதற்காக பொருத்தமானது என இசைவுச் சான்றிதழும் பெற்றிருக்கவில்லை. மேலும் இந்த கட்டிடம் காட்டுப் பிரதேசத்தில் வனவிலங்குகள் நடமாடும் இடமொன்றில் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக வனசீவராசிகள், வனபாதுகாப்பு மற்றும் சுற்றாடல் உட்பட நிறுவனங்களின் உரிய அங்கீகாரம் பெற்றுக் கொண்டிருக்கவில்லை.<br>மீளாய்வாண்டின் போது இந்த கட்டிடத்தின் பயன்பாடு மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | கட்டிட வரைபு வனசீவராசிகள் நிறுவனம் உட்பட UDA அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்ட பின்னர் மீதியாகவுள்ள இசைவுச் சான்றிதழ் பெற்றுக் கொள்வதற்காக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | இந்த நிர்மாணவேலை தொடர்பாக உரிய அங்கீகாரங்கள் பெற்றுக் கொள்வதற்கு மற்றும் கட்டிடத்தை உச்ச மட்டத்தில் பயன்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.6 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சிமியுலேடர் கொள்வனவு செய்வதற்காக தேசிய போட்டி விலைகூறல் அழைப்பின் கீழ் பத்திரிகை அறிவித்தல் வெளியிடப்பட்டிருந்த போதிலும் பெறுகை வழிகாட்டல் கோவையின் படி 21 நாட்கள் காலம் வழங்கப்பட வேண்டிய போதிலும் அதற்கு | சிமியுலேடர் அனேகமாக பயன்படுத்தபடுகின்ற அல்லது உற்பத்தி செய்யப்படுகின்ற பண்டமொன்றாக காணப்படாததுடன் வழங்குனர்கள் மிகவும் வரையறையாக காணப்பட்டது. அதன் காரணமாக விலைகூறல் | பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் கொள்வனவு செய்தல் மேற்கொள்ளும் போது விலைகூறல்கள் சமர்ப்பிப்பதற்கான குறிப்பிட்ட காலம் வழங்கப்படல் போட்டித் |

| | | |
|---|---|---|
| முரணாக போதியளவு காலமொன்று வழங்கப்படாமல் 12 நாட்கள் மாத்திரம் வழங்கப்பட்ட காரணத்தினால் ஒரு நிறுவனத்தினிடம் இருந்து மாத்திரம் கூறுவிலைகள் கிடைக்கப்பட்டிருந்தது. அந்த விலை மிகையாகக் காணப்படாமையால் மற்றும் விலைகூறல்தாரர்கள் வரையறுக்கப்பட்டிருத்தல் காரணத்தினால் மீண்டும் கூறுவிலைகள் அழைப்பதற்கு நேரிட்டிருந்தது. அதன்படி அறிவித்தலுக்காக செலவிடப்பட்டிருந்த தொகையும் விளைவற்ற செலவொன்றாக மாறியிருந்தது. | தாரர்கள் குறைவாக இருந்த போதிலும் விலைகூறலை ஏற்றுக்கொள்வதற்கு முன்னர் கூட்டம் நடாத்தப்பட்டிருந்தமையால் காலம் போதியளவாக காணப்படாவிடின் அதற்காக விலைகூறல்தாரருக்கு விண்ணப்பிக்க முடியுமாக இருந்தது. | தன்மையை அதிகரிப்பதற்கும் அனுகூலமான விலையொன்று தெரிவு செய்வதற்கும் சந்தர்ப்பம் வழங்கப்படாமைக்கு பொறுப்பான உத்தியோகத்தருக்கு எதிராக முறையான நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் பெறுகை முறைமை செயற்திறனுடன் மற்றும் ஆக்கபூர்வ தன்மையுடன் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.7 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறை (SOR) படி உதவி பணிப்பாளர் பதவியில் 10 வருடங்கள் மற்றும் ஏனைய விடயங்களை பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர் ஒருவருக்கு பிரதிப் பணிப்பாளர் MM-1-1 தரம் வழங்க முடியும் எனினும் அந்த பதவியை ஏற்றுக்கொள்வதற்கு மறுத்திருந்த உத்தியோகத்தர் ஒருவருக்கு அந்த நாள் முதல் முற்திகதி குறிப்பிடப்பட்டு பதவியுயர்வு வழங்கப்பட்டிருந்தமையால் அவருக்கு கூடிய சம்பளமொன்று வழங்குவதற்கு நேரிடுதல் போலவே வெற்றிடமாக காணப்பட்ட பணிப்பாளர் பதவிக்காக விண்ணப்பிக்கும் போது ஏனைய விண்ணப்பதாரிகளுக்கு அநீதியொன்று ஏற்படும் சந்தர்ப்பம் காணப்படுகின்றது. | மத்திய முகாமைத்துவம் (MM-1-1) சேவைத் தொகுதியில் உதவிப் பணிப்பாளர் தரம் II முதல் பிரதிப் பணிப்பாளர் தரம் I இற்கு பதவி உயர்வு, அந்த பதவியுயர்வு செயற்படுத்தப்படும் நாள் மற்றும் நிலுவை சம்பளம் அதிகரிப்பு செலுத்துதல் தொடர்பாக 1/4/107-II(1015) கொண்ட 2024 மார்ச் 10 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திடம் விளக்கமொன்று அழிக்கும்படி வேண்டுதல் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டது. | ஆட்சேர்ப்புநடவடிக்கை முறைமையில் அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்யப்பட்டிருந்த உத்தியோகத்தர்களுக்கு உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பதவியுயர்வு வழங்குதல் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட, உள்ளவாறான பதவியணிகள் முறையே 390 மற்றும் 196 ஆகக் காணப்பட்டதுடன் அத் திகதியில் உள்ளவாறு அதிகார சபையின் 194 வெற்றிடங்கள் காணப்பட்டது. அதில் 17 சிரேஷ்ட மட்ட வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் பணிப்பாளர் (நிதி) மற்றும் பணிப்பாளர் (அபிவிருத்தி) பதவிகளும் முறையே 2 வருடங்கள் | ஆரசினால் ஆட்சேர்ப்பு வரையறுக்கப்பட்டிருந்தமையால் அதிகார சபையின் வெற்றிடப் பதவிகளுக்காக ஆட்சேர்த்தல் நிறுத்தப்பட்டிருந்ததுடன் ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையில் திருத்தமொன்று மற்றும் பதவிகளின் எண்ணிக்கையில் திருத்தமொன்றிற்காக பணிப்பாளர் சபையினால் | ஆட்சேர்ப்பு உரிய அங்கீகாரத்தை விரைவாக பெற்றுக் கொண்டு அத்தியவசியமான பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் ஒரு வருடங்கள் முதல் வெற்றிடமாகக் காணப்பட்டது. | அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன் அதற்காக முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | 2021 ஒக்தோபர் 08 திகதி அப்போதைய அதிகார சபை பணிப்பாளர் (நிதி) அவர்களை கட்டாய விடுமுறையில் அனுப்புவதற்கு எதிராக அந்த உத்தியோகத்தரினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் அது தொடர்பான ஐந்து வழக்குகளுக்காக 2025 ஆகஸ்ட அளவில் அதிகார சபையினால் ரூபா 15.01 மில்லியனுக்கான சட்டச் செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. நீதிமன்றத்தை அவமதித்தல் என்ற குற்றச் சாட்டின் கீழ் முன்னைய பணிப்பாளர் (நிதி) இனால் அதிகார சபையின் பணிப்பாளர் சபைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 10.8 மில்லியன் தொகையும் அதில் அடங்குவதுடன் அது இது வரை முடிவடைந்திருக்கவில்லை. | முன்னைய பணிப்பாளர் (நிதி) இனால் நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு முடிவடையும் நாள் தொடர்பாக எதிர்வுகூற முடியாது என குறிப்பிடுவதுடன் கௌரவ சட்டமா அதிபரினால் பணிப்பாளர் (நிதி) இன் ஆரம்ப வழக்கொன்றிற்கு தோற்றுவதை புறக்கணிக்கப்பட்டிருந்தமையால் பின்னர் பணிப்பாளர் (நிதி) தொடர்பாக அடுத்த வழக்கு தொடர்பாகவும் எமது நிறுவனத்தினால் தனிப்பட்ட சட்டவரைஞர்களின் உதவியை பெற்றுக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டது. | சரியான நிருவாகத் தீர்மானங்கள் எடுக்கப்படாமையால் மற்றும் பலவீன மனிதவள முகாமைத்துவத்தின் ஊடாக அதிகார சபைக்கு மேற்கொள்ள நேரிட்டிருந்த இவ்வாறான சட்டச் செலவுகள் பொறுப்பான தரப்பினர்களிடம் அறவீடு செய்ய விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | முன்யை நிதிப் பணிப்பாளரினால் முன்னைய தலைவருக்கு எதிராக தனிப்பட்ட முறையில் தாக்கல் செய்யப்பட்டிருந்த அவமதித்தல் வழக்கு (DMR/3067/2022 இலக்கங் கொண்ட வழக்கு) பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் ரூபா 0.42 மில்லியன் சட்டவரைஞர் கட்டணம் அதிகார சபையினால் செலுத்தப்பட்டிருந்தது. | இந்த வழக்கின் முறைப்பாட்டிற்காக முன்னைய தலைவரினால் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வாதியின் பதில் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள இந்த வழக்கிற்கு காரணியான காரணம் அந்த முன்னைய நிதிப் பணிப்பாளரின் சேவையை இடைநிறுத்துதல் கடமை அலுவல் ஒன்றாக காணப்பட்டதுடன் தன்னால் தனிப்பட்ட மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடொன்று அல்ல எனவும் இந்த வழக்கிற்காக தனிப்பட்ட சட்டவரைஞர்கள் பயன்படுத்துவதற்கு அவர்களின் சட்டவரைஞர் கட்டணம் நிறுவனத்தினால் செலுத்துவதற்கு முகாமைத்துவச் சபையினால் தீர்மானிக்கப்பட்டது. | தனிப்பட்ட மட்டத்தில் உத்தியோகத்தருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்குகளுக்காக நிறுவனத்தின் பணம் செலவிடுவதற்காக அங்கீகாரம் வழங்கியிருந்த பொறுப்பான தரப்பினரை இனங்கண்டு அந்தப் பணத்தை அறவீடு செய்வதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.8 வாகன முறைமை முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆண்டு முதல் 2023 ஆண்டு வரை ஏற்பட்டிருந்த 12 திடீர் விபத்துக்கள் மற்றும் மீளாய்வாண்டின் போது ஏற்பட்டிருந்த 10 விபத்துகள் தொடர்பாக ஆரம்ப மற்றும் இறுதி அறிக்கைகள் 2025 மார்ச் 30 திகதி வரை தயாரித்திருக்கவில்லை. | முகாமைத்துவத்தினால் கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் வாகன விபத்துக்கள் தொடர்பாக ஆரம்ப மற்றும் இறுதி அறிக்கைகள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | தலைவருக்கு ஒதுக்கப்பட்டிருந்த வாகனத்திற்கும் மீளாய்வாண்டின் போது நான்கு திடீர் விபத்துக்கள் ஏற்பட்டிருந்ததுடன் அவற்றில் மூன்று சந்தர்ப்பங்களில் காப்புறுதியினால் அணவல் செய்யாதிருந்த திருத்தச் செலவுகள் ரூபா 379,059 தொகை காணப்பட்டது. | தலைவருக்கு இணைக்கப்பட்டிருந்த வாகனம் தொடர்பாக 2023 மற்றும் 2024 ஆண்டுகளுக்கான ஏற்பட்டிருந்த திடீர் விபத்துக்களின் கோவை நிதிப் பிரமாணம் 104(3) படி விசாரணை மேற்கொள்ளும் குழுவிற்கு அனுப்பப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் விசாரணை மேற்கொண்டு காப்புறுதியினால் அணவல் செய்யாத நட்டத்தை பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினரிடம் அறவீடு செய்வதற்காக தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | அதிகார சபையின் தலைமை அலுவலகம், (CHPB) மற்றும் (CETRAC) நிறுவனங்களுக்கு சொந்தமான 50 வாகனங்கள் காணப்படுவதுடன் அவற்றில் 06 வாகனங்கள் செயற்படு நிலைமையில் காணப்படவில்லை. அதிகார சபைக்கு நன்கொடையாக கிடைத்திருந்த 32-3923 வாகனம் உரித்தாக்கப்பட்டிருக்கவில்லை. | அதிகார சபைக்கு நன்கொடையாக வழங்கப்பட்டிருந்த 32-3923 இலக்கங் கொண்ட வாகனத்தை உரித்தாக்குவதற்கு அமைச்சினால் உரிய ஆவணங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் தற்போது அந்த ஆவணங்கள் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்திற்கு சமர்பிக்கப்பட்டுள்ளதுடன் அங்கு CMT 130 படிவம் நிரப்பப்பட்டு மீண்டும் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்திற்கு வழங்குவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | அதிகார சபைக்கு நன்கொடையாக கிடைத்திருந்த வாகனத்தை உரித்தாக்கும் அலுவல்கள் விரைவாக மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் செயற்படாமல் காணப்பட்ட வாகனங்களை திருத்த வேலைகள் மேற்கொள்வதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகார சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் உள்ளகக் கணக்காய்வாளர் (உதவிப் பணிப்பாளர்) பதவியொன்று காணப்பட்ட போதிலும் அந்தப் பதவி மூன்று வருடங்களுக்கு மிகையான காலம் முதல் வெற்றிடமாக காணப்பட்டதுடன் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிற்காக ஒரு உத்தியோகத்தர் மாத்திரம் இணைக்கப்பட்டுள்ளது. பிராந்திய மட்டத்தில் மூன்று பயிற்சி நிலையங்களும், 189 உத்தியோகத்தர்கள் அதிகார சபையில் சேவையாற்றிய போதிலும் அதன் உள்ளக கட்டுப்பாடு மற்றும் செயற்பாடுகள் தொடர்பாக முறையான மீளாய்வொன்று மேற்கொள்வதற்காக போதிய எண்ணிக்கையான உத்தியோகத்தர்கள் உள்ளக கணக்காய்வுப் பிரிவிற்கு இணைக்கப்பட்டிருக்கவில்லை. | அரசினால் ஆட்சேர்ப்புக்கள் வரையறுக்கப்பட்டுள்ளமையால் அதிகார சபையின் வெற்றிடப் பதவிக்காக ஆட்சேர்ப்பு நிறுத்தப்பட்டுள்ளதுடன் ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையில் திருத்தம் மற்றும் பதவியணி எண்ணிக்கையில் திருத்தத்திற்காக பணிப்பாளர் சபையில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன் அதற்காக முகாமைத்துவத் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | ஆட்சேர்ப்புக்குரிய அங்கீகாரங்கள் விரைவாக பெற்றுக் கொண்டு உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் வெற்றிடங்களை நிரப்புவதன் மூலம் அதிகார சபையின் உள்ளகக் கட்டுப்பாடு முறைமையை வலுப்படுத்த வேண்டும். |